# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்~08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி -25 | 10-07-2003 | வியாழக்கிழமை | ஓசை 142



கிளிநொச்சியில்
கணினி மையம்
TCC
கணினி விற்பனையாளரும் திருத்த சேவையாளரும்
யாழ். சாலை, கிளிநொச்சி.


# உயர் பாதுகாப்பு வலய விடயத்தில் அரசாங்கம் புலிகள், மக்களின் கருத்துக்களைக் கேட்கவேண்டும்

## இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அதுவே வழி என்கிறார் தென்னாபிரிக்க பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர்

(யாழ்ப்பாணம்)

**பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்படும் போது தனிமனித உரிமைகள் மதிக்கப்படாமையால் தான் முரண்பாடுகள் தோற்றம் பெறுகிறது. இந்த விடயத்தில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளினதும் மக்களினதும் ஒருமித்த கருத்துக்களைக் கேட்க வேண்டும் என தென்னாபிரிக்க பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கலாநிதி றொக்கி வில்லியம் தெரிவித்துள்ளார்.**

நேற்று யாழ். பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் கொங் என்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயமும் சமாதான முயற்சிகளில் இயல்பு வாழ்க்கையும், என்ற தலைப்பிலான கருத்தமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணப்படும் போது அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை களையப்பட வேண்டும். அப்போதுதான் திருப்திகரமான ஒரு தீர்வை எட்ட முடியும். உயர் பாதுகாப்பு வலயம் என்பது சாதாரண விடயம் அல்ல அதனை நாம் பரந்துபட்ட இராணுவ அரசியல் முறையிலேயே பார்க்க வேண்டும். இவ்வாறான பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்படும் போதும் அது தொடர்பான கட்டுமானங்க

(08ஆம் பக்கம் பார்க்க)

## லெப்.கேணல் நிர்மலனுக்கு வீரவணக்கம்

வவுனியா மாவட்டத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

லெப்.கேணல் நிர்மலன் (சிவானந்தன் நிர்மலராஜ், பலாலி வீதி, திருநெல்வேலி, வடக்கு யாழ்ப்பாணம், த.மு பரந்தன் வீதி முரசு மோட்டை கிளிநொச்சி; நிரந்தர இடம் 18/1 தருமபுரம் பரந்தன் கிளிநொச்சி) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.



### இராணுவ முகாம் அருகில் இருப்பதால்

## ஆலய வருடாந்த உற்சவத்தை நடத்த முடியாது சிரமம்

யாழ். அரியாலை பிரப்பம் குளம் கருமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகில் இராணுவ முகாம் ஒன்று அமைந்திருப்பதனால் இவ்ஆலயத்தில் வருடாந்தத் திருவிழாவை நடத்துவதில் ஆலய பரிபாலன சபையினர் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி வருகின்றனர்.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்படி ஆலயத்தில் திருவிழா நடைபெறவுள்ளது. இவ்வாலயத்தில் விழாக்காலத்தில் பெருமளவு பக்தர்கள் நடமாடுவதற்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தை நீக்க எந்த நடவடிக்கையையும் அரசு எடுக்கவில்லை

### அரசாங்க உயர் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

வடக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுவதற்கான எந்த நடவடிக்கையிலும் அரசாங்கம் ஈடுபடவில்லை என அரசாங்க உயர் வட்டாரங்களை மேற்கோள் காட்டும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் பேச்சுவார்த்தைகள் முடிவுற்று இரு சாராருக்குமிடையில் இணக்கப்பாடும், இறுதித்தீர்வும் ஏற்படும் வரை உயர் பாதுகாப்பு வலயங்கள் இருக்கும் என உயர் பாதுகாப்பு வட்டாரங்களும் கூறுகின்றன. தமிழ் மக்களும் புலிகளும் உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுமாறு தொடர்ந்து கோரிவருகின்றனர். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக, அவற்றை அகற்ற முடியாது என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவின்

## முதலாவது பெண்கள் அணி இன்று பயிற்சி முடித்து வெளியேறுகிறது

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் இயங்கிவரும் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் மனிதாபிமான செயற்பாடுகளுக்காக புதிதாக இணைக்கப்பட்டுள்ள முதலாவது பெண்கள் அணி தமது பயிற்சிகளை இன்று நிறைவுசெய்து வெளியேறுகிறது.

(08.ஆம் பக்கம் பார்க்க)

## மின்சார வேலியை அகற்றும் வரை பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப பெற்றோர் மறுப்பு

### மின்சாரவேலியை அகற்ற கடற்படைக்குச் சம்மதமில்லை

வேலணைப்பகுதியில் நேற்று முன்தினம் ஐயனார் வித்தியாலய மாணவன் துறையூர் பகுதியிலுள்ள கடற்படையினரின் மின்சார வேலியினால் தாக்குண்ட சம்பவத்தையடுத்து நேற்று அப்பகுதி மாணவர்கள் எவரும் பாடசாலைக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். முட்கம்பி வேலிகள் அகற்றப்பட்டு பாதுகாப்பு வேலிகள் அகற்றப்படும்வரை தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பப்போவதில்லை என்று பெற்றோர் தெரிவித்துள்ளார்கள்.

இதையடுத்து நேற்று அப்பகுதிக்குச் சென்ற சர்வதேச கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகளிடம் மாணவர்களின் பெற்றோர், முன்பும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டி சம்பவத்தை விளங்கவைத்துள்ளனர்.

இதையடுத்து சர்வதேச கண்காணிப்புப்பிரதிநிதிகள் கடற் படை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவுற்றது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையும் தங்களால் இந்த வேலிகளை அகற்றுவது தொடர்பாக எந்தவித முடிவுகளையும் வெளியிட முடியாது என்று கூறியுள்ளனர்.

## இந்திய மீன்பிடி ரோலர்களால் யாழ். மீனவர்களுக்கு பெரும் சொத்தழிவு

### அமைச்சுக்கு முறையீடு செய்தும் பயனேதும் இல்லை

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களினது ரோலர் மீன்பிடிப்படகுகளால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ்ப்பாண மீனவர்கள் யாழ். அரச அதிபர் ஊடாக மீன்பிடித்துறை அமைச்சுக்கு, பலமுறைப்பாடுகளைச் செய்துள்ளனர். ஆனால் இது தொடர்பாக இதுவரையும் எந்த ஒரு நடவடிக்கையும் அமைச்சினால் எடுக்கப்படவில்லை என்று மீன்பிடி நீரியல் வளத்துறைத் திணைக்கள வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு தொடர்ச்சியாக யாழ். குடாநாட்டுக் கடற்பரப்பில் இந்திய ரோலர்களின் அடாவடித்தனத்தால் குடாநா

(08ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நிலையம் மாற்றம்

க.பொ.த.(உ/த) சங்கீத, நடன, மனைப்பொருளியல் பாட செயன்முறைப் பரீட்சைக்கான பரீட்சை நிலையம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அனுமதி அட்டையில் பரீட்சை நிலையம் கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பரீட்சை நிலையம் கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற சகல பரீட்சார்த்திகளும் செயன்முறைப் பரீட்சைக்கு கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

### ஏழு வருடங்களின் பின்

## கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது

(அலுவலக செய்தியாளர்)

சத்ஜெய இராணுவ நடவடிக்கையால் முற்றாக சேதமடைந்திருந்த கிளிநொச்சிமாவட்ட மருத்துவமனை ஏழு வருடங்களின் பின் மீண்டும் தனது சொந்த இடத்தில் நேற்றுக் காலை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது.

1996 ம் ஆண்டு கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் வகையில் சிறிலங்காப்படையினரால் மேற்கொள்ளப்

(08ஆம் பக்கம் பார்க்க)



# தலைநகர் கொழும்பிற்குள் 100ற்கு மேற்பட்ட தற்கொலைப் போராளிகள்

## அநுரா பண்டாரநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

தலைநகர் கொழும்பிற்குள் நூற்றுக்கும் மேற்பட்ட தற்கொலைப் போராளிகள் ஊடுருவியுள்ளதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளை நம்பி ஆளும் ஐ.தே.முன்னணி அரசு ஏமாந்துவிட்டது எனவும் அவர் கூறினர்.

நாடாளுமன்றத்தில் அவை ஒத்திவைப்புப் பிரேரணையின் போது பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என கூறிய அநுரா பண்டாரநாயக்க சேதனைச் சாடிகள் மூடப்பட்டதற்கும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

# பெண்மணி காயம்

(வடமராட்சி கிழக்கு)

உழவியந்திரத்தில் கட்டப்பட்டிருந்த தடி வீதியால் போன பெண்மணி ஒருவரை இடித்ததில் அவர் வீதியில் விழுந்து காயமடைந்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பகல் 1.50 மணியளவில் பளைநகர் பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

துணுக்காய் பகுதியிலிருந்து மாடு ஏற்றிக்கொண்டு யாழ்.நோக்கிச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரத்தில் குறுக்கே கட்டப்பட்டிருந்ததடி வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த பெண்மணியின் காதில் அடித்துள்ளது. இதனால் அவர் அணிந்திருந்த தோடு உடைந்து வீழ்ந்தது அவரும் வீதியில் வீழ்ந்து காயமடைந்தார். (11)

# போக்குவரத்து சிரமம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பிலிருந்து முல்லைத்தீவுக்குச் செல்லும் வீதி புனரமைக்கப்படாமையால் அவ்வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இவ்வீதி புதுக்குடியிருப்பு சிவன் கோவில் வரையுமே புனரமைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முல்லைத்தீவில் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதாலும் அங்கு பெருமளவு மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளதாலும் இவ்வீதி சீர்கேடு அடைந்துள்ள நிலையில் மக்களும், பணியாளர்களும் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது. (20)


# வட்டுவாகல் சப்த கன்னிமார் கோவில்




## வருடாந்த பொங்கல் விழா

முல்லைத்தீவில் அமைந்துள்ள வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலய வருடாந்த பொங்கல் விழா வழமைபோல் இம்முறையும் சுபானு வருசம் ஆனி மாதம் 29ஆம் நாள் (14-07-2003) திங்கட்கிழமை மிகவும் சிறப்பான முறையில் அம்பாளுக்கான அபிசேகத்துடன் கூடிய விசேட பூசைகளுடனும் நடைபெறவுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.

(3250)

# வாழ்த்துகின்றோம்

## செல்வன் -கு. கோகுலரூபன்

(மு/வற்றாப்பளை)



2003-07-04ம் திகதி நடைபெற்று முடிந்த மாகாண மட்ட மெய்வன்மைப் போட்டிகளின் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 800, 1500, 5000 மீற்றர்கள் ஓட்டப்போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்று முதன்மை வீரனாகத் தெரிவு செய்யப்பட்ட செல்வன் கு.கோகுலரூபன் அவர்களை வாழ்த்துகின்றோம்.

அதிபர் ஆசிரியர்கள்.மாணவர்கள்
பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சபையினர்
மு/வற்றாப்பளை ம.வி

# துயர் பகிர்கின்றோம்

## அமரர் தனுஷ்கோடி. சுப்பிரமணியம்

எமது நிறுவனத்தின் அலுவலகச் செய்தியாளர் சு.யாஸ்கரன் அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் தனுஷ்கோடி சுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினரின் பிரிவுத் துயரில் நாமும் நனைகின்றோம்.

ஈழநாதம்
பணிப்பாளர், பணியாளர்கள்.

(இ)

# சாவு அறிவித்தல்

## லெப்டினன்ட் கேணல் நிர்மலன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், முரசுமோட்டை பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்ட போராளி லெப்டினன்ட் கேணல் நிர்மலன் (சிவானந்தன் நிர்மலராஜ்) அவர்கள் 08-07-2003 அன்று செவ்வாய்க்கிழமை சாவடைந்துள்ளார். இவர் கலஞ் சென்ற சிவானந்தன் மற்றும் புஸ்பராணி தம்பதியினரின் அருமை மகனும் காலஞ்சென்ற கதிர்காமு மற்றும் தில்லைநாயகி தம்பதியினரின் அருமை மருமகனும், வசந்தியின் (போராளி லோஜனா) அன்புக் கணவரும் ஆரணி, அருளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், DR. மோகன், சிவானந்தன் (லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரனும், நாகநாதன் (லண்டன்) திருமதி மதிவதனி பூரண சுவாமிநாதன் (லண்டன்) திருமதி துளசி மோகனதாஸ் (லண்டன்) ஆகியோரின் மைத்துனருமாவார். மாவீரரின் வித்துடல் இன்று 10-07-2003 பி.ப.2.30 மணிக்கு இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் வணக்கத்திற்கு வைக்கப்பட்டு மாலை 5.00 மணிக்கு கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
போராளி லோஜனா (மனைவி)
முரசுமோட்டை, பரந்தன்.

(3434)



# இளமுருகன் நிழற்படப் பிரதியாக்கல் நிலையம்

பூநகரி பிரதேச செயலர்பிரிவில் உள்ள முழங்காவில் பொன்னாவெளி பூநகரி, வன்னேரி இலுப்பைக்கடவை பகுதி மக்களுக்கு மிக அண்மையில் ஆவணங்களை நிழற்படப்பிரதியாக்கல் தட்டச்சு (ரைப்பிங்) செய்து கொடுக்கப்படும். 13-07-2003 தொடக்கம் பல்லவராயன்கட்டு மாதிரிக்கிராமத்தில் ஆரம்பமாகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(3431) உரிமையாளர்.

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 23-03-1983



தாயக மண்ணில் 10-07-2000

## 2ஆம் லெப். நளினி

### திருநாமம் சசிமளாதேவி

எங்கள் உணர்வுக்குள் உறைந்திருக்கும்
உயிர் உள்ள மகளே – உன்
தேகம் மறைந்து இன்று மூன்றாண்டு ஆனாலும்
பறந்து சென்றாலும் பார்க்கத் துடிக்கின்றோம்.
மகளே – நீ வித்துடலாய் வந்த காட்சி கனவாய் போகாதோ!
புன்னகைத்த உன்முகம் எம் – கண்
நனைந்து போகிறது மகளே
கை கூப்பித் தொழுது உன் கல்லறைக்குப் பூச்சொரிகின்றோம்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

நி.மு. ஆனையிறவு
உப்பளம்.
த.மு. நாகேந்திரபுரம்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்

(3432)

# நீங்காத நினைவில்...

11 ஆம் ஆண்டு | 16 ஆம் ஆண்டு



பிறப்பு
25 – 07 – 1966
10 – 05 – 1961

வீரச்சாவு
10 – 07 – 1992
02 – 04 – 1987



## மேஜர் கிண்ணி

(கந்தசாமித்துரை ரவீந்திரன்)
சாள்ஸ் அன்ரனியின் விசேட தளபதி

## கப்டன் முரளி

(கந்தசாமித்துரை சிறீதரன்)

தாயக விடுதலைக்காய் தலைவன் தானையில்
தனயனோடு தம்பியும் சேர்ந்து சமர் பல புரிந்தீர்
தமிழினத்தின் விடுதலைக்காய் தடைகள் பல கண்டும்
தளர்ந்திடாது இறுதிவரை போர்புரிந்தீர்
விடுதலை நோக்கி விரையும் வேளையில்
மண்ணில் வித்தாகினீர்–உமது நினைவுகள்
சுமந்து உம்பணி தொடர்கின்றோம்
உமது கனவுகளை விரைவினில் நனவாக்கிடுவதற்காய்...!

குடும்பத்தினர், போராளிகள்.

(3430)

# இந்.இராணுவத்தை மோசமாகச் சித்தரித்து அமெரிக்காவில் 153 பக்க அறிக்கை


**இந்திய இராணுவத்தை மோசமாகச் சித்தரித்து அமெரிக்காவில் அறிக்கை ஒன்று வெளியாகியுள்ளது. "இந்திய-அமெரிக்க இராணுவ உறவுகள்" எனும் தலைப்பிலான அந்த அறிக்கை இந்திய இராணுவத்தை மிக மோசமாகச் சித்தரிக்கின்றது**

இந்த அறிக்கை முற்றிலும் தவறானது என்று இந்தியா அதைநேற்று முன்தினம் நிராகரித்துள்ளது.

இது பற்றி டில்லியில் பேசிய வெளியுறவு அமைச்சர், செய்தித் தொடர்பாளர், இந்திய இராணுவம் அளப்பரிய திறமை மிக்கது. அதன் திறமை பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. உலகிலுள்ள எந்த இராணுவத்தையும் விடவும் சவாலை ஏற்கும் பெருமிதம் கொண்டது என்றும் கூறியுள்ளது.

இந்த ஆவணத்தில் காணப்படும் இந்தியாவுக்கு எதிரான விடயங்களுக்கும் தமக்கும் எந்தவித சம்பந்தமுமில்லை என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இது பற்றி அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நேற்று முன்தினம் வாஷிங்டனில் பேசுகையில், அந்த 153 பக்க அறிக்கை ஒரு ஒப்பந்த அறிக்கை, பலர் இணைந்து தயாரித்தது என்றும் அதைப் பெண்டகன் தயாரிக்கவில்லை என்றும் கூறியுள்ளனர்.



ஈராக்கில் அமெரிக்க நிர்வாகத்தில் புதிதாகப் பொலிஸ் சேவையில் இணைந்து கொண்டவர்களுக்குப் பயிற்சி வழங்கப்படுகிறது

# இந்.நாடாளுமன்றக் குழு பாக்.இல் சுற்றுப் பயணம்

(இஸ்லாமாபாத்)

இந்தியா-பாகிஸ்தானிடையேயான வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் வகையில் விஸா கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமெனப் பிரதமர் வாஜ்பாயிடம் பாகிஸ்தான் வர்த்தகக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தியா பாகிஸ்தானிடையே அமைதிப் பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு ஏதுவாக இவ்விரு நாடுகளுக்கிடையேயான பேருந்துப் போக்கு வரத்து வரும் 11 ஆம் திகதி முதல தொடங்கவுள்ளது.

மேலும் பாகிஸ்தான் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் வகையில் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவும் அந்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்நிலையில் இந்தியா பாகிஸ்தானிடையேயான வர்த்தக உறவை மேம்படுத்துதும் வகையில் பாகிஸ்தானிலிருந்து 37 தொழிலாளர்கள் அடங்கிய வர்த்தகக் குழு ஒன்று இந்தியா வந்துள்ளது.

இக்குழு நேற்று முன்தினம் பிரதமர் வாஜ்பாயை டில்லியில் சந்தித்துப் பேசியவுடன், இரு நாட்டு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக விஸா கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டுமென பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## இந்தியாவில் முதல் முறையாக மூட்டுமாற்று அறுவைச்சிகிச்சை

(புதுடில்லி)

இந்தியாவில் முதன் முறையாக மனித உடலிலிருந்து எடுக்கப்பட்ட எலும்பைக் கொண்டு புற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு மூட்டுமாற்று அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.


சென்னை அரச மருத்துவமனை மருத்துவர்கள் இந்த அரிய சிகிச்சையைச் செய்துள்ளனர்.

மனித உடலில் எலும்புகள் பாதிக்கப்படும் போது அவற்றுக்குப் பதிலாக உலோகத்தைப் பொருத்தி அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதே வழக்கம்.

ஆனால், இதற்கு மாறாக முழங்காலில் எலும்புப் புற்று நோயால் பாதிக்கப்பட்ட சிவகுமார் என்பவருக்கு சென்னை அரச பொது மருத்துவமனையில் நேற்று முன்தினம் புதிய முறையில் மூட்டுமாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையிலுள்ள எலும்பு வங்கியில் பதப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருந்த இறந்த மனித உடலிலிருந்து அகற்றப்பட்ட முழங்கால் எலும்பை இறக்குமதி செய்து இந்தச் சிகிச்சையைப் பேராசிரியர் மயில்வாகனம் தலைமையிலான மருத்துவக் குழு நேற்று முன்தினம் மேற்கொண்டுள்ளது.

இதனையடுத்து இந்தியாவில் முதன்முறையாக சென்னை அரச மருத்துவமனையில் எலும்பு வங்கி அமைக்கப்படவுள்ளது என்றும் கூறப்படுகின்றது.



செனகல் நாட்டிற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க சனாதிபதி புஷ் செனகல் அதிபருடன் கைகோர்த்து நின்று அளவளாவுகிறார்.

# பூமிக்கருகில் செவ்வாய்க் கிரகம் ஆகஸ்ட்-28இல் பார்க்கலாம்

(லண்டன்)

விண்ணில் விந்தையை ரசிக்கும் ஆர்வலர்களுக்கு எதிர் வரும் ஆகஸ்ட் 28ஆம் திகதி ஒரு அற்புதம் காத்திருக்கிறது.

அன்றைய தினத்தில் பூமிக்கு மிக அருகில் செவ் வாய்க்கிரகம் வரவுள்ளது. அப்போது அவ்விரண்டுக்கும் இடைப்பட்ட தொலைவு 5.58 கோடி கிலோ மீற்றராக இருக்கும். இதன் மூலம் அந்தக் கிரகத்தை இன்னும் தெளிவாகப் பார்க்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்விரு கிரகங்களும் ஒன்றையொன்று நெருங்கி வருவது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் நிகழ்வாகும்.

73 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் பூமிக்கு மிக அருகில் செவ்வாய்க் கிரகம் தற்போது வருகிறது. இதற்குப் பின்னர் 2287ஆம் ஆண்டில் இன்னும் 70 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவுக்கு பூமியை செவ்வாய்க் கிரகம் நெருங்கிவரும்.

பூமியை நோக்கி செவ்வாய்க் கிரகம் நெருங்கி வருவதை வெறும் கண்ணாலோ அல்லது தொலை நோக்கி மூலமாகவோ பூமியில் எந்த இடத்திலிருந்தும் பார்க்கலாம். பொதுவாக செவ்வாய்க்கிரகத்தை "டெலஸ்கோப்" மூலம் பார்த்தால் வட்டத்தகடு போன்று தோற்றம் தரும். பூமியிலிருந்து வெறும் கண்ணாலும் செவ்வாய்க் கிரகத்தைப் பார்க்கலாம். ஆனால் அது சூரியனுக்கு நெருக்கமாகச் செல்லும் போது கண்ணுக்குத் தெரியாது. ஆகஸ்ட் 28ஆம் திகதி நிகழும் விந்தைக்காகக் காத்திருக்கின்றனர் விண்ணியல் கலை வல்லுநர்கள். அப்போது செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பை இன்னும் தெளிவாகக் தொலை நோக்கி மூலம் பார்க்க முடியும். ஆனால் தூசிப் படலம் இல்லாமல் இருக்க வேண்டும். ஜூலை மாதத்தில் தென்கிழக்கு திசையில் நள்ளிரவுக்குப் பின் செவ்வாய்க் கிரகத்தைப் பார்க்க முடியும். ஜூலை 17,18ஆம் திகதிகளிலும் ஆகஸ்ட் 13ஆம் திகதிகளிலும் செவ்வாய்க் கிரகமும் சந்திரனும் நெருக்கமாக வரும்.




அமெரிக்காவிற்கும் கனடாவிற்குமிடையிலான எல்லையில் பாலத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்துப் பொலிசார் பாலத்தினூடான போக்குவரத்தை நிறுத்திச் சோதனையிடுகின்றனர்.

# அணுவாயுத கண்காணிப்புக் குழு தலைவர் ஈரான் பயணம்

ஐக்கிய நாடுகள் அணுவாயுத கண்காணிப்பு அமைப்பின் தலைவர் முகமட் அல்பராடி ஈரானுக்கு பயணமாகின்றார்.

ஈரானிய சனாதிபதி முகமட் கட்டாமி மற்றும் அணுவளத் திட்டத்தின் தலைவர் குலாம் றிஷா ஆகியோரை சந்திப்பார் எனத் தெரிகின்றது.

மேலதிகப்பிரகடனம் என்ற சாசனம் ஒன்றில் கைச்சாத்திடுமாறு அல்பராடி ஈரானிய அதிகாரிகளை வலியுறுத்துவார் எனக் கூறப்படுகிறது. இத்திட்டத்தை ஆக்கபூர்வமான தெனக் கருதுவதாக ஈரான் தெரிவித்துள்ளது. ஆயினும் இத்திடடத்தில் ஈரான் கைச்சாத்திடாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## விசாரணை ஆரம்பம்

(புதுடில்லி)

பொடோ சட்டத்தின் படி தமிழ் நாடு உள்ளிட்ட 14 மாநிலங்களில் கைது செய்யப்பட்டவர்கள் குறித்து நீதிபதி அருண்லபி தொகாரியா தலைமையிலான மூன்று உறுப்பினர் பொடோ மறு ஆய்வுக் குழு நேற்று முன்தினம் டில்லியில் விசாரணையைத் தொடங்கியுள்ளது. தமிழ் நாட்டில் பொடோ சட்டம் தவறாகப் பயன்படுத்தப் பட்டுள்ளதாக வந்துள்ள குற்றச்சாட்டுகளை அம்மாநில அரசிற்குஅனுப்பி இருப்பதாகவும், தமிழ் நாடு அரசிடமிருந்து பதிலுக்காகக் காத்திருப்பதாகவும் அக்குழு கூறியுள்ளது.

# உருளைக் கிழங்கிலிருந்து மருந்து கண்டுபிடிப்பு

தென்னாபிரிக்காவில் பரம்பரை பரம்பரையாக மரபுவழி மருத்துவத்தில் ஈடுபட்டு வருபவர்கள் உருளைக் கிழங்கைப் பயன்படுத்தி எயிட்ஸ் நோயாளிகளுக்கு மருத்துவம் செய்யும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

தென்னாபிரிக்காவிலுள்ள சங்கோமா எனும் பிரிவினர் காலம் காலமாகச் செய்துவரும் பல்வேறுவகை மூலிகை மருத்துவத்தைத் உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளனர்.

இவர்கள் அறிமுகப்படுத்தியுள்ள ஆபிரிக்க உருளைக் கிழங்கு மூலம் எயிட்ஸ் நோயாளிகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதான மருந்துகளை இவர் அறிமுகப்படுத்தியுள்ளார்.



இஸ்ரேலிய சிறையிலுள்ள பலஸ்தீனர்களின் அடிப்படை உரிமைகள் பேணப்பட வேண்டுமெனக் கோரி பலஸ்தீன மக்கள் போராட்டம் நடத்துகின்றனர்.

# ஈராக் போர் முடிந்து விட்டதா...?

அ. கலைவாணி

ஈராக் மீதான போர் கடந்த மே முதலாம் திகதி முடிந்து விட்டதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் பிரகடனப் படுத்தி இருந்தார். ஆனால் மழை விட்டும் தூவானம் போகாத கதையாய் நாளும் ஈராக்கில் அமெரிக்க-பிரிட்டிஷ் படையினர் ஈராக்கியர்களின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் தத்தளிக்கும் நிலை உருவாகியுள்ளது என்றால் மிகையாகாது.

"சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்க்கப் பட்டுவிட்டது. ஈராக்கிய மக்கள் சுதந்திரமாக வாழவும், ஈராக்கை கட்டியெழுப்புவதுமே தமது அடுத்த நடவடிக்கை" என ஜோர்ஜ் புஷ் பெருமிதப்பட்டுக் கொண்டது ஓரிரு நாட்களாகக் கூட இருக்கலாம். ஈராக்கியர்களின் நாளாந்த எதிர்ப்பும் படையினரின் இழப்பும் தற்போது புஷ்ஷின் பெருமிதத்தை பிளந்து, புதிதாக பெரிய உபாதையாக உரு மாறிவிட்டது என்பதில் ஐயமேயில்லை.

ஈராக்கியர்கள் ரொக்கட் தாக்குதல்,ஏவுகணைத் தாக்குதல், கண்ணிவெடி, கொரில்லா தாக்குதல்,... என தமது எதிர்ப்பை பல வழிகளிலும் அமெரிக்காவுக்குக் காட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களது இந்தத் தாக்குதல்களில் நேற்று முன்தினம் வரை 30 அமெரிக்கப் படையினரும், 06 பிரிட்டிஷ் படையினரும் மாண்டுள்ளனர். இதனைவிட அதிகமானவர்கள் காயமடைந்ததுடன் இவர்களது கவச வாகனங்கள் டாங்கிகள் என்பனவும் சேதமடைந்துள்ளன.

அத்துடன், ஈராக்கில் அமெரிக்கப் படையினரால் பயிற்சியளிக்கப்பட்ட ஈராக்கிய காவல் துறையினரில் 07 பேரும் உயிரிழந்திருப்பது ஈராக்கிய காவல்துறையினர் மத்தியில் பெரும் பீதியையும் உருவாக்கியுள்ளது.

அமெரிக்க சனாதிபதியோ ஈராக் போர் முற்றுப் பெற்றுவிட்டது என்கின்றார். ஈராக்கிலோ நாளும் படைகளின் இழப்பு அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. எனவே ஈராக் போர் முடிந்து விடவில்லை. அது தொடர்கின்றது. அதனால் போர் முடிந்து விட்டது என்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்... என்று அவதானிகள் வினா எழுப்பியுள்ளனர்.

அதேநேரம், ஈராக் அமெரிக்காவிற்கு மற்றொரு வியட்நாமாக இருக்குமா... இருக்கின்றதா... என அமெரிக்க பாதுகாப்புச் செயலர் ரொனால்ட் ரம்ஸ் பெல்ட்டிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது,

இல்லை இல்லை என்றும் அது வேறு யுகம். இது வேறுயுகம் என்று அவசர அவசரமாக மறுப்புக் கூறியதுடன், ஈராக்கில் எதிர்ப்பவர்கள் 05 வகையினர் இருப்பதாகவும் அவர்களை ஈடுகட்ட சிறிது காலம் செல்லும் தானே என்று பதில் கேள்வி கேட்டுள்ளார்.

அதிகமாக தாக்குதல்களை நடத்துபவர்கள் சதாம் ஹுசைனின் விசுவாசிகளும், பாத். கட்சியினருமே. இவர்கள் கட்டுப்படுத்தப்படும் போது ஏனையவர்கள் தாமாகவே மறைந்து விடுவார்கள் என்றும் ரம்ஸ் பெல்ட் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஆனால், அமெரிக்க மக்களோ, வியட்னாமில் அமெரிக்கப்படையின் இழப்பை நினைவு கூர்ந்து கொள்வதாலும், ஈராக்கில் நாளும் ஏற்படும் இழப்புக் காரணமாக அச்சமும், மறுபுறம் அமெரிக்க அரசு மீது விசனமும் கொண்டுள்ளனர் என்று கூறப்படுவதால்,

இத்தகைய நிலைமையானது அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் 2004 மீண்டும் சனாதிபதி கனவை பகல் கனவாக்கும் பரிதாபத்திற்கு இட்டுச் செல்லும் என்றும் அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏனெனில், ஈராக்கில் பரவலாக 1,56000 அமெரிக்கப் படையினர் இருக்கும் நிலையில் பிரிட்டிஷ் படையினரை விட அமெரிக்கப் படையினர்தான் ஈராக்கியர்களின் தாக்குதல்களுக்கு அதிகமாகப் பலியாகின்றார்கள். இதனால் ஈராக்கின் நிலை மிகவும் மோசமாக உள்ளது என்பதனாலும் அமெரிக்க அரசை மக்கள் வெறுக்க ஆரம்பித்துள்ளார்கள்.

ஈராக் மீதான போர் சரியானதே என்று கூறிய மக்கள் தற்போது அக்கூற்றை மறுக்கவும் தொடங்கியுள்ளனர்.

அது மட்டுமன்றி, ஜோர்ஜ் புஷ்ஷின் சனாதிபதித் தேர்தலுக்கான தந்திரோபாய திட்டங்களையெல்லாம் ஓரம் கட்டிவிடும் அளவிற்கு மக்களின் மனநிலை மாறிக் கொண்டு வருகின்றது என்பதால், புஷ்ஷின் அரசியல் வாழ்வு இந்த வருடத்துடன் முடிவுக்கு வரலாம்... என்றும் கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

மறுபுறம் ஈராக்கிய மக்கள் சதாம் ஹுசைனின் அராஜக ஆட்சியை வெறுத்திருந்தனர். அதனால் அத்துமீறி நுழைந்த அமெரிக்காவை ஓரளவு சகிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆனால், உள்ளே வந்த அமெரிக்காவோ வெளியே போகவும் இல்லை. போக எத்தனிக்கவும் இல்லை. நிலையாக அமெரிக்கப் படைகள் தங்கியதுடன், மக்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கவில்லை என்றும் ஈராக்கியர்கள் இவ்வளவு நாளும் குற்றம் சாட்டிக் கொண்டிருந்தனர்.

ஆனால், ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான பாலூஜாவில் மசூதியில் குண்டு வெடித்து 07 பேர் பலியானமையினால் தற்போதோ மிகவும் கொதித்துப் போயுள்ளனர். எனவே இதுவரையும் சதாம் ஹுசைனின் விசுவாசிகள் மட்டுமே அமெரிக்கப் படையினரை வெறுத்து எதிர்த்து வந்தனர்.

தற்போதைய மசூதி குண்டு வெடிப்பில் அப் பகுதி முஸ்லிம்கள் அமெரிக்கப் படையினருக்கு எதிரான "புனிதப் போரை தொடங்கவேண்டும்." எனக் கோஷமிடுகின்றனர்.

இன்னொருபுறம் அந்நியர் ஆட்சியை எதிர்ப்பவர்கள் போர்க் கொடி தூக்கியுள்ளனர். ஈராக்கைக் குண்டுகளால் சல்லடை போட்ட அமெரிக்கா இதுவரை மக்களுக்காக என்ன செய்தது.... புனர்நிர்மாணப் பணிகளையாவது தொடங்கியதா... என ஒரு சாராரும், எமது நாட்டை எம்மிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேற வேண்டியது தானே... என மற்றொரு சாராரும் வினாக்களையும் எதிர்ப்புக்களையும் தெரிவிக்க ஆரம்பித் துள்ளனர்.

எனவே இத்தகைய எதிர்ப்புக்களைப் பார்க்கையில் முன்னைய வியட்நாம் நினைவு படுத்தப்படுவதாக அவதானி கள் கருத்துக் கூறியுள்ள னர்.

அதேநேரம் ஈராக்கில் தொடரும் தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவர மேலும் 60,000 படையினர் தேவைப்படுவர் என அமெரிக்க சட்டவாக்குநர்கள் கூறியுள்ளனர்.

இதனை ஏற்றுக் கொள்ளும் அமெரிக்க செனட் சபை உறுப்பினர் ஜோசப் பைடிர், இதனை அமெரிக்கா செய்யாது விட்டால், ஈராக் நிலைமை கட்டுப் படுத்த முடியாத எல் லையை எட்டிவிடும் என அச்சம் தெரிவித்துள் ளார்.

இதனால், ஈராக்கின் ஒரு பகுதியின் பாதுகாப்பைப் போலந்துப் படை ஏற்க வேண்டும் என அமெரிக்க சனா திபதி கோரிக்கை விடுத் துள்ளார்.

அதுமட்டுமன்றி எங் கள் பிரச்சினைக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்ட இந் தியா, பாகிஸ்தானிடம் அமெரிக்கா தனக்கு உதவி செய்யுங்கள் என்பது போல ஈராக்கிற்கு இராணுவத்தை அனுப்பக் கோரியிருந்தது.

ஈராக்கில் அதிகரித்திருக்கும் கொரில்லாத் தாக்குதல்களில் இருந்து தமது இராணுவத்தைப் பாதுகாக்கவே இந்தியாவின் உதவி கோரப்படுகின்றது. இந்திய இராணுவம் ஏன் ஈராக்கில் பலியாக வேண்டும்....? ஈராக் தாக்குதல் நியாயமற்றதே.... என கட்சிகளின் ஏகோபித்த எதிர்ப்பினால் இந்திய இராணுவம் ஈராக்கிற்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

அதேபோல் பாகிஸ்தானும் தமது இராணுவத்தை அனுப்பாது என இஸ்லாமாபாத்தும் திட்டவட்டமாகக் கூறியுள்ளது.

இதேநேரம், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு உதவி செய்ய வேண்டாம். அவர்களுக்கு எதிராகப் போராடுபவர்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் எனும் சதாம் ஹுசைனின் கோரிக்கையை அல்-ஜசீரா அரபிய தொலைக்காட்சி கடந்த 04 ஆம் திகதி ஒலி பரப்புச் செய்துள்ளது.

இது தற்போது அமெரிக்காவுக்குப் புதிய தலைவலியைக் கொடுத்துள்ளது.

இதுவரைகாலமும் அமெரிக்கா வின் தாக்குதலில் சதாம் ஹுசை னும், அவரது இரண்டு மகன்களும் இறந்துவிட்டதாக அமெரிக்கா புள காங்கிதம் அடைந்திருந்த வேளையில் இந்த தொலைக்காட்சி ஒலி பரப்புப் பெரும் சர்ச்சையையும் உரு வாக்கியுள்ளது.

ஏனெனில், சதாம் உயிருடன் இருந்தால்.... புதியதான தாக்குதல்களும் ஆரம்பமாகலாம்....

எனவே, இவற்றைத் தடுக்க அமெரிக்கா, சதாம்ஹுசைனையும் மகன்களையும் பற்றிய தகவல்களையோ, அவர்களை இனம் காட்டித் தருபவர்களுக்கோ 234 கோடி ரூபா பரிசாகக் கொடுக்கப்படும் என அதிரடியாக அறிவித்துள்ளமையும், புதிய தொல்லைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே என்பது புரியாத விடயமல்லவே.

அத்துடன் அமெரிக்காவில், அமெரிக்க சனாதிபதி அடுத்த நாடுகளின் விடயங்களில் தானாகத் தலையிட்டு, அந்நாடுகள் மீது போர் தொடுப்பதாகக் குற்றம் சாட்டி அம்மக்கள் இரு வாரங்களுக்கு முன்னர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே ஈராக்கில் தொடரும் தாக்குதல்கள், அமெரிக்க மக்களின் எதிர்ப்பு என்பனவெல்லாம் ஜோர்ஷ் புஷ்ஷின் அரசியல் வாழ்க்கையின் அத்திவாரத்தை ஆட்டம் காண வைத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

எனவே நாளைய ஈராக்கில் அமெரிக்கப் படையின் நிலை என்ன.... ஈராக்கில் அமெரிக்காவின் செல்வாக்கு நிலைக்குமா... தனது சனாதிபதி பதவியைத் தக்கவைத்துக் கொள்ள ஜோர்ச் புஷ் அடுத்ததாக என்னதான் செய்ய எத்தணிப்பார்..... அடுத்த 2004 சனாதிபதி தேர்தலுக்கு எவ்வாறு முகம் கொடுப்பார்..... என்பனவே, தற்போது அரசியல் வட்டாரத்தில் வினவப்படும் வினாக்களாக வுள்ளது. □


ஈராக்கியரின் தாக்குதலில் அழிந்த அமெரிக்க இராணுவ வாகனங்கள்


ஈராக்கில் ரோந்துப் பணியில் அமெரிக்க- பிரிட்டிஷ் இராணுவம்


அமெரிக்க இராணுவத்தால் கைது செய்யப்படும் ஈராக்கியர்

# வேலை நிறுத்தம் செய்த ஊழியரை கைதுசெய்வது அடிப்படையான உரிமை மீறல்

## தமிழக தலைமை நீதிபதி சாடுகிறார்

(சென்னை)

தமிழக் அரசின் ஊழியர் வேலைநிறுத்தம் தொடர்பான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தும் நடைபெறுகின்றது.

நேற்று முன்தினம் விசாரணையில், பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் மாநில நிர்வாக பேம் பாயத்தை அணுகி முறையிடலாம் என்றும், கைது செய்யப்பட்ட ஊழியர்கள் நீதிமன்றத்தின் மூலம் ஜாமின் பெறலாம் என்றும் அரசின் வழக்கறிஞர் விவாதித்துள்ளார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி சுபாஸ் ரெட்டி தலைமை ஊழியர்கள் குற்றவாளிகள் அல்லர் என்றும், நள்ளிரவில் இவர்களைக் கைது செய்வது அடிப்படை உரிமைகளை மீறிய செயலாகும் என்றும் கூறியுள்ளார்.

இதேநேரம் ஊழியர் ஆசிரியர்களின் வேலை நிறுத்தத்தையடுத்து மாநிலம் முழுவதும் அரச பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் புதிதாக ஊழியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். 11500 ஊழியர்களைத் தற்காலிகமாக நியமிக்க அரசு எத்தனித்துள்ளது.

# மக்களவைக்கான தேர்தலை எவ்வேளையும் சந்திக்கத் தயார்!

## -காங்கிரஸ் தலைவி அறிவிப்பு

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தலை இந்த ஆண்டில் நடத்தினாலும், அடுத்த ஆண்டில் நடத்தினாலும் அதைச் சந்திக்கக் காங்கிரஸ் கட்சி தயாராகவுள்ளது என்று அதன் தலைவி சோனியாகாந்தி கூறியுள்ளார்.

சிம்லாவில் கடந்த திங்கட்கிழமை தொடங்கிய 03 நாட்கள் மாநாட்டில் பேசுகையில் சோனியாகாந்தி இவ்வாறு கூறியதுடன், பா.ஜ.கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசை மக்கள் தேர்தலில் நிராகரிப்பார்கள் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாதப் பிரச்சினையைப் பயன்படுத்தி மக்களிடையே பிரிவு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு முயன்று வருகின்றது என்று குற்றமும் சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள், காங்கிரஸ் ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் சட்டப் பேரவை காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்பட 270 பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

# சமாதானத்திற்கான உறுதியான சூழல் ஏற்பட்டாலே யாழ்.இல் தேசிய விளையாட்டுக்களை நடத்த முடியும்

## - விளையாட்டு அமைச்சு அதிகாரிகளிடம் புலிகள் கருத்து

(யாழ்ப்பாணம்)

**சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டால் மட்டுமே யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு விழாவை நடத்த முடியுமென புலிகள் தெரிவித்துள்ளனர்.**

தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக இங்கு வந்திருந்த விளையாட்டு அமைச்சின் அதிகாரிகள் குழுவினரிடம் இந்தக் கருத்து கூறப்பட்டுள்ளது.

இது குறித்த கூட்டமொன்று நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல் தலைமையில் நடைபெற்றுள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சின் உயர் அதிகாரிகளான எல். பீரிஸ், எஸ். பத்மா ஆகியோர் தலைமையிலான குழுவினர் யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரிகள் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

இதில் தேசிய விளையாட்டுக்கான இறுதி ஏற்பாடுகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது. அப்போது கருத்துத் தெரிவித்த புலிகளின் பிரதிநிதிகள் "சமாதானத்துக்கான உறுதியான சூழல் ஒன்று மீண்டும் ஏற்பட்டாலே தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியும். அதற்கு பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு சமாதான முயற்சிகள் மீண்டும் முன் நகர வேண்டும். அப்போதுதான் தேசிய விளையாட்டு விழா போன்ற விழாக்கள் பற்றிச் சிந்திக்க முடியும்.

தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்தத் தீர்மானித்தது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. எனினும் எமது மக்கள் சுதந்திரமாக மகிழ்ச்சியுடன் விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளும் சூழ்நிலை இங்கு இல்லை. இராணுவத்தினரின் திடீர் ரோந்தும், சோதனை நடவடிக்கைகள் மற்றும் புதிய காவலரண்கள் நிறுவுகின்றமை எமது மக்கள் மத்தியில் அச்சத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளன. பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு ஓர் அமைதியான சூழல் உருவான பின்பே இங்கு தேசிய விளையாட்டு விழாவை நடத்துவது சாலப்பொருத்தமானது என தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து தேசிய விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இந்த விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதற்காக யாழ். துரையப்பா விளையாட்டரங்கு துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

## ரோந்து

(கொழும்பு)

கண்டி நகர பொலிஸ் பிரதேசத்திற்குள் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் கொள்ளைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிறிலங்கா பொலிசார் ரோந்து நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

## யு.என்.எச்.சி.ஆர்.-புலிகள் மட்டக்களப்பில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

அகதிகளை எப்படி பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கான அகதி அந்தஸ்து வழங்குவது சம்பந்தமான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை நடைபெற் றுள்ளது.

இதில் மட்டக்களப்பு - கரடியனாறு தேனகம் விருந்தினர் விடுதியில் மட்டக்களப்பு மாவட்ட யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளுக்கும் புலிகளின் பிரதிநிதிகளுக்கம் இடையில் நடைபெற்றுள்ளது.

## ஊழல் குற்றச்சாட்டிலிருந்து வீரவன்ச விடுவிப்பு

(கொழும்பு)

ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நீக்கப்பட்டுள்ளார்.

இவருக்கெதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரித்த ஆணைக்குழு அனைத்து முறைப்பாடுகளிலும் அவர் குற்றமற்றவர் என்று தீர்ப்பளித்து இவருக்கெதிரான விசாரணைகளைத் தொடர்ந்து நடத்துவதில்லை என்றும் முடிவு செய்துள்ளது என விசாரணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கையரின் கைரேகை பதிந்தபின்பே விஸாவழங்க பிரித்தானிய அரசு முடிவு

## சட்டவிரோத குடியேற்றக்காரரைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

(லண்டன்)

இலங்கையிலிருந்து பிரிட்டனுக்கு விஸாபெற்றுச் செல்ல விண்ணப்பிப்பவர்களுக்கு அவர்களது கைரேகைகள் பதியப்பட்டபின்னரே விஸா வழங்க முடியுமென பிரிட்டிஷ் அரசாங்கம் திடீர் அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

சட்டவிரோதமாக பிரிட்டனில் இலங்கையர்கள் குடியேறுவதையும் தஞ்சம் கோருவதையும் தடுக்கவே இந்தப் புதிய முறை அமுல்படுத்தப்படுவதாக பிரிட்டிஷ் அரசு கூறியுள்ளது.

இலங்கையர்கள் பலர் விஸா பெற்று பின்னர் நாட்டினுள் நுழைந்ததும் தமது ஆவணங்களை அழித்து விட்டு சட்டவிரோதமாகக் குடியேறி வருவதால் அவ்வாறான முயற்சிகளைத் தடுப்பதற்கே இப்புதிய நடைமுறை கொண்டு வரப்பட்டிருப்பதாக பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் பெவர்லி ஹியூக்ஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பிரிட்டிஷ் அரசு மேற்கொண்ட முடிவின்படி பிரிட்டனுக்கு சட்டவிரோதமாகக் குடிவருபவர்களைத் தடுப்பதற்கான முயற்சிகளில் முதலாவது திட்டமாக விரல் அடையாளங்களைப் பதிவு செய்வது இலங்கையில் மட்டும் இம்மாதம் இறுதி முதல் அமுலுக்கு வரவுள்ளது.

ஆறுமாதகால அவதானிப்பின் பின்னர் இது தொடர்ந்தும் வெற்றியளிக்கும் பட்சத்தில் இதே நடைமுறையைஅனைத்து நாடுகளின் பிரஜைகளுக்கும் பிரிட்டன் கட்டாய நடைமுறையாகக் கொண்டுவரவுள்ளதென அமைச்சர் ஹியூக்ஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் புதிதாக திட்டமிட்டிருக்கும் சட்ட விரோத குடியேற்றகாரர்களைக் கட்டுப்படுத்தும் யோசனைகள் பெரும் மனித உரிமை மீறலுக்குரியவை என ஐரோப்பிய யூனியனும், மனித உரிமை வாதிகளும் அண்மையில் கண்டனம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## -வடக்கு - கிழக்கு மாகாண-

# பாடசாலை மாணவர்களின் சதுரங்கப் போட்டி கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கு மாகாண பாடசாலைகளின் சதுரங்கப் போட்டி கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றன.வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகள் பெரும்பாலானவை இப்போட்டியில் பங்கு கொண்டன.

ஆயினும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள் இப்போட்டிகளில் பங்கு கொள்ளவில்லை. கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் தெரிவுப் போட்டிகள் நடாத்தப்படாததால் இவர்கள் பங்கு பற்றும் வாய்ப்பை இழந்துள்ளனர் என மாணவர் கவலை தெரிவித்தனர்.

# பாடசாலை மாணவருக்கு சின்னமுத்து தடுப்பு ஊசி

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு சின்னமுத்து தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்டு வருகின்றது.

சின்னமுத்து நோயினால் ஏற்படக் கூடிய மரணத்தையும் ஊனங்களையும் தடுத்து சின்னமுத்து நோயிலிருந்து பூரண பாதுகாப்பு பெற்றுக்கொள்வதற்கான தடுப்பு மருந்து உலக சுகாதார நிறுவன அனுசரணை யுடன் 11வயது தொடக்கம் 15 வயது வரையான பிள்ளைகளுக்கு ஏற்றப்பட்டு வருகின்றது.

பிரதேச மருத்துவத் தாதியர்கள் அடங்கிய மருத்துவக் குழுவினர் பாடசாலைகள் தோறும் நேரடியாகச் சென்று தடுப்பு ஊசி மருந்துகளை ஏற்றி வருகின்றனர். (12)

# பூநகரி அ. பு. கழகத்தால் செயலமர்வுக் கருத்தரங்கு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் போரூட் நிதியுதவியுடன் பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தினரால் பள்ளிக்குடா கொல்லகுறிச்சி ஆகிய கிராம சேவகர் பிரிவில் நடைமுறைப்படுத்தப்படும் வருமானத் திட்ட (பசு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு) பயனாளிகள் 156 பேருக்கு கடந்த திங்கட்கிழமை பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

அன்றையதினம் 156 பேருக்கு சமூக பொருளாதார வங்கியில் கணக்கு திறந்து வைக்கப்பட்டது.

## கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு நடவடிக்கைகள் இம்மாத இறுதிக்குள் மேற்கொள்ளப்படவுள்ளது. இது வரை வளர்ப்பு நாய்களுக்கு இலக்கத் தகட்டைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் அவ்வப்பகுதி பிரதேசசபை உப அலுவலகங்களில் பதிவு செய்து தகட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (20)

# இடைக்கால நிர்வாக சபைக்குப் பதில் மாகாண நிர்வாகக் குழு

## - சிறிலங்கா அரசாங்கம் ஆராய்வு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குக்கென விடுதலைப்புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்த அரசாங்கம் மாகாண நிர்வாகக் குழு(**Provincial Administrative committee**) எனும் பெயரிலான கட்டமைப்புக்கான யோசனைகளையே அனுப்பி வைக்கத் தீர்மானித்திருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்களிலிருந்து நம்பகமாகத் தெரிய வருகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கு வழி செய்யும் விதத்தில் வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டுமென்பதில் அரசாங்கம் அக்கறை காட்டித் தொடர்ந்து ஆலோசனைகளை மேற்கொண்டு வந்தது.

இடைக்கால நிர்வாக சபை என்ற முழு அளவிலான ஆட்சிக் கட்டமைப்புக்குள் வரும் விடயங்களை உள்ளடக்கியதாக ஒரு மாகாண நிர்வாகப் பொறுப்பை வழங்குவதன் மூலம் நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பதனாலேயே இந்த மாகாண நிர்வாகக் குழு என்ற கட்டமைப்பு யோசனையை அரசு முன்வைக்கத் தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த மாகாண நிர்வாகக் குழுவில் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் பிரதான பங்கு வகிக்கும் விதத்திலேயே யோசனை தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முழுமையாகக் கையாளும் விதத்திலேயே உத்தேசக் கட்டமைப்பு யோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுவில் மாவட்ட மட்டத்தில் அரசாங்க அதிபர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறக்கூடிய விதத்திலேயே வரைபு தயாரிக்கப்பட்ட போதிலும் நிர்வாகப் பணிகளைப் பொறுத்த மட்டில் அரசும் விடுதலைப்புலிகளும் சம உரிமையைக் கொண்டவர்களாகவே இருப்பர் என்றும் யோசனையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி நிர்வாகக் கட்டமைப்பு யோசனைகள் தயாரித்து முடிக்கப்பட்டிருப்பதாகவும் இறுதிக் கட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இடைக்கால நிர்வாகம் என்ற சொற்பதம் இங்கு பிரயோகிக்கப்படாது போனாலும் இடைக்கால நிர்வாக சபைக்குரிய பணிகளே இதனூடாகவும் மேற்கொள்ளப்படுமென அரசாங்கம் அதன் யோசனையில் விடுதலைப்புலிகளுக்குச் சுட்டிக்காட்டவிருப்பதாக அறிய வருகின்றது.

இதேவேளை, இடைக்கால நிர்வாக சபை விடயத்தில் அரசாங்கம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைக் கண்டு கொள்ளத் தவறியதாகவும் முஸ்லிம் காங்கிரஸுக்கு உரிய இடமளிக்கப்பட வேண்டுமெனவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் விவகார அமைச்சருமான ரவூப் ஹக்கீம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து வலியுறுத்தியிருக்கிறார்.

இந்தச் சந்திப்பை அடுத்து முஸ்லிம் காங்கிரஸின் யோசனைகளைத் தருமாறு பிரதமர் அமைச்சர் ஹக்கீமிடம் கேட்டிருக்கின்றார்.

இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும் பட்சத்தில் அரசு - புலிகள் என்ற தரப்புகளுக்கு அப்பால் முஸ்லிம் காங்கிரஸின் தரப்பும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனவும், நிர்வாகப் பொறுப்புகள் அரசாங்க அதிபர் வசம் கொண்டுவரப்படுவதால் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்வதால் அந்த இரு மாவட்டங்களுக்குமான அரசாங்க அதிபர்களாக முஸ்லிம்கள் நியமிக்கப்பட வேண்டும் எனவும் யோசனை முன் வைக்கப்படவிருப்பதாகவும் தெரிய வருகின்றது.

முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை அரசாங்கம் ஏற்பதை முஸ்லிம் காங்கிரஸ் கடுமையாக எதிர்ப்பதாகவும், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை முஸ்லிம் காங்கிரஸே உறுதி செய்யும் எனவும் அரசுக்குச் சுட்டிக்காட்டுவதாக முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்-ரி-ஹஸன் அலி தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாகத்தின் போது முஸ்லிம்கள் தொடர்பான யோசனைகளை உள்ளடக்கிய வரைபொன்றைத் தயாரிப்பதற்காக முஸ்லிம் காங்கிரஸ் அதியுயர் பீடம் சட்டத்துறை சார்ந்தவர்களை உள்ளடக்கிய குழுவொன்றை அமைத்திருப்பதாகவும் கட்சியின் யோசனை வெள்ளிக்கிழமை அளவில் பிரதமரிடம் கையளிக்கப்படவிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

# சமாதான முயற்சிகளில் சர்வதேசம் முன்னெப்பொழுதையும் விடத்தீவிர கவனம்

## அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

**முன்னெப்போதும் இல்லாதவாறு சமாதான முயற்சிபற்றி சர்வதேச சமூகம் கவனம் செலுத்துவதாக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கூறியுள்ளார்.**

மீண்டும் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதற்கு புலிகள் விருப்பம் கொண்டுள்ளமை அவர்கள் சமாதானத்தில் கொண்டுள்ள தீவிரமான கவனத்தை எடுத்துக் காட்டுவதாகும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

தற்போதைய பொருளாதார சமூக, அரசியல் நடவடிக்கைகளை பலம் வாய்ந்த நாடுகளும், சர்வதேச அமைப்புகளும் அங்கீகரித்துள்ளமையால் இந் நிலை ஏற்பட்டுள்ளதென நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் கூறியுள்ளார்.

## கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி தரம் 1க்கான புதிய மாணவர் அனுமதி 2004

கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரியில் 2004 ஆம் ஆண்டு தரம் 1 இல் சேரவிருக்கும் மாணவர்கள் தங்களது விண்ணப்பங்களை 31-07-2003 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

## விளையாட்டுப்போட்டி

வள்ளிபுனத்திலுள்ள செந்தமிழ் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

மங்கல விளக்கினை தேவிபுரம் கிராம சேவகர் சொக்கலிங்கம் அவர்களும் சமூக சேவகி ப. விமலா அவர்களும் ஏற்றி வைத்தனர். தொடர்ந்துதேசியக் கொடியினை வள்ளிபுனம், உடையார்கட்டு வலயப் பொறுப்பாளர் மயூரன் அவர்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை தவசீலன் அவர்களும் (இணைப்பாளர்(முன்பள்ளி, விசுவமடு) அகதிகள் புனர்வாழ்வுக்கழகக் கொடியினை இணைப்பாளர் நிகால்டீன் அவர்களும் முன்பள்ளி மேம்பாட்டு கொடியினை செல்வி பியசீலி இணைப்பாளர் அவர்களும், முன்பள்ளிக்கான. கொடியினை முதன்மை ஆசிரியர் செல்வி ஜெயலட்சுமி அவர்களும் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையை திருமதி ந. யோகேஸ்வரியும்(செயலாளர் தே.எ. பேரவை தேவிபுரம்) ஆசியுரையை ஐ.மாதவராசாவும் (செயலர் தே.எ. பேரவை வள்ளிபுனம்) ஆற்றினர். தொடர்ந்து முன்பள்ளி மாணவ மாணவியரின் விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் உடற்பயிற்சியும்,வினோத உடையும் அனைவராலும் கவரப்பட்டது. பெற்றோர், உத்தியோகத்தர், பழைய மாணவர்களுக்கான நிகழ்வும் இடம்பெற்றன. வந்திருந்த முதன்மை விருந்தினர்கள் பரிசு பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்தனர். இரவு 7.00 மணியளவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச்செயலர் வேலுமாமா அவர்களின் நன்றி உரையுடன் நிறைவு பெற்றது.

## புதிய முன்பள்ளி

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிதியுதவியுடன் கிளி/கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினால் 3ஆம் வாய்க்கால் பன்னங்கண்டியில் அப்பகுதிச் சிறுவர்களின் நன்மைகருதி முன்பள்ளி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

## முன்பள்ளி திறனாய்வுப் போட்டி

(ஒட்டுசுட்டான்)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் முன்பள்ளிகளுக்கான திறனாய்வுப் போட்டிகளை நடத்தியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தினேஸ் முன்பள்ளியும் அண்மையில் மாலதி, பண்டாரவன்னியன், அகஸ்ரின் ஆகிய முன்பள்ளிகளிலும்திறனாய்வுப் போட்டிகளை நடாத்தியுள்ளனர். (05)

## பெற்றுக்கொள்ளவும்

வட்டக்கச்சிப்பகுதியில் வஸ்தியாம்பிள்ளை ஜோன்பீட் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல.431623927V) அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அட்டையும் காவல்துறையினரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும்.(12)

## வெண்புறா நிறுவனத்தினரின் விழிப்புணர்வு நடவடிக்கை

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா நிறுவனத்தினர், இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு மிதிவெடி உள்ள இடங்கள் பற்றியும் அதனால் ஏற்படும் தீமைகள் பற்றியும் விளக்கமளித்துள்ளனர்.

கடந்த 4ஆம் திகதி பிரமணங்குளத்திலும் 5ஆம் திகதி 17ஆம் கட்டை பழம்பாசி கிராமத்திலும் 6ஆம் திகதி 9ஆம் கட்டை மேழிவனம் கிராமத்திலும் 7ஆம் திகதி சின்னச்சாளம்பன் கிராமத்திலும் உள்ள மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினர். (05)

## மாயவனூர் வித்தியாலய கூரையின் அவல நிலை

வட்டக்கச்சி மாயவனூர் வித்தியாலயம் மிகவும் சேதமடைந்து கூரைமோசமான நிலையில் காணப்படுகின்றது.

இப்பாடசாலை நிரந்தரமாக்கப்பட்ட பாடசாலையாக இருந்தும் தரம் 01 முதல் 05 வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இப்பாடசாலையில் 106 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அதிபர் உட்பட மூன்று நிரந்தர ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். இங்கு ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகின்றது தற்போது 60 அடி நீளமான இக் கட்டடத்திலேயே வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. இப்பாடசாலையின் காரியாலயமாக பயன் படுத்தப்படும் கொட்டகையும் மிகவும் சேதமடைந்த நிலையிலேயே உள்ளது. பாடசாலையை வேய்வதற்கு எந்த நிறுவனத்தினரும் முன்வரவில்லை. (12)

**-க.பொ.த.உயர்தர பரீட்சையில் -**

## சித்தியடைவோர் எண்ணிக்கையில் யாழ். 27ஆவது இடத்தில்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் சித்தியடைவோர் எண்ணிக்கையில் யாழ்ப்பாணம் 27 ஆவது இடத்தில் உள்ளதென மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் கல்லூரியில் இடம் பெற்ற பரிசளிப்பு விழாவில் உரையாற்றும்போது வட-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் 28 ஆவது இடத்தில் யாழ்ப்பாணம் இருந்தது. இதன் மூலம் வட-கிழக்குப் பகுதியில் கல்விநிலை மோசமாக பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு நாட்டில் இடம் பெற்ற கொடிய யுத்தமும் தற்போது மாணவர்களிடையே தேவையற்ற பொழுது போக்குகளும் முக்கிய காரணம் என அவர் மேலும் கூறியுள்ளார்.


# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தங்களது சுயவிபரமடங்கிய வேண்டுகைகளை 2003.07.20 ஆம் நாளிற்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

பணிநிலை
01] ஆய உதவியாளர் [ஆண்கள்]
02] ஆய அலுவலர் [ஆண்கள்]

**கல்வித் தகைமை:-**

பணிநிலை 01 –க.பொ.த [சா/த] பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

பணிநிலை 02 –க.பொ.த [உ/த] பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

நடுவப்பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

(சீ - 8408)



சிந்தனைக்கு

எதிரியைவிட துரோகிகளே ஆபத்தானவர்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 10-07-2003

## மீண்டும் காட்டிக்கொடுப்பு

விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் செயற்படுத்த வேண்டிய புதிய செயற்றிட்டம் ஒன்றை இனத்துரோகக் கும்பல்களான ஈ.பி.டி.பி. மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி) ஆகியன சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் சமர்ப்பிக்க உள்ளமை ஒன்றும் ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல.

இவ்விரு குழுக்களும், விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் - தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக நீண்ட காலமாகவே செயற்பட்டு வருகின்றமை வெளிப்படையானது. தமிழர்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை தங்களால் இயன்ற வரையில் சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கும் உரிமைப் போராட்டத்திற்கு எதிராகச் செயற்பட்ட வெளியாருக்கும் இவர்கள் காட்டிக்கொடுத்து வந்தவர்கள்.

தமிழ் மக்கள் மீது சிறிலங்கா மற்றும் இந்திய இராணுவங்கள் பெரும் யுத்தத்தினைத் தொடுத்த போதும் இவர்கள் அவ்விரு ஆக்கிரமிப்பு சக்திகளுக்கும் ஆதரவாகவே செயற்பட்டனர். தமிழர்கள் மத்தியில் உறவுகளைக்கொண்ட இச்சக்திகள் காட்டிக் கொடுப்பின் மூலம் இனத்திற்குத் துரோகம் இழைத்தனர். இராணுவ ரீதியில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராகவும் நேரடியாகவும், காட்டிக் கொடுப்பின் மூலமுமாகச் செயற்பட்ட இத்தேச விரோதக் கும்பல்கள் பல அப்பாவித் தமிழ் மக்களின் மரணத்திற்கும், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டோரின் இழப்பிற்கும் காரணமாக இருந்துள்ளனர்.

இந்திய இராணுவம் இலங்கையில் நிலை கொண்டிருந்த போது, ஈ.பி.ஆர்.எல்.எவ்(வரதர் அணி) மிகவும் நெருக்கமாக இந்தியாவிற்கு ஒத்துழைப்பை வழங்கியது. இக்காலப் பகுதியில் நடந்த பல படுகொலைகளுடன் இது தொடர்பு பட்டதாக இருந்துள்ளது.

ஈ.பி.டி.பி.யோ சிறிலங்கா இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டதோடு நீண்ட காட்டிக்கொடுப்புக்களுடன் தொடர்புபட்டதாக இருந்தது. சிறிலங்கா இராணுவத்திற்குப் புலனாய்வு ரீதியாக உதவிய முக்கிய குழுவான ஈ.பி.டி.பி., ஆக்கிரமித்த தமிழர்தாயகப் பகுதியில் சிங்கள இராணுவம் நிலைகொள்வதற்கு உதவி புரிந்து வந்தது.

இவ்விரு குழுக்களும் தனியாகக்காட்டிக் கொடுப்புடன் மட்டும் நின்று விடவில்லை. அரசியல் என்ற ரீதியில் ஆக்கிரமிப்பாளர்களின் செயற்பாடுகளுக்கு வடிவம் கொடுப்பதற்கும் ஒத்துழைப்பு வழங்கினர். அதாவது தமிழ் மக்களினாலும் உரிமைப் போராட்டத்தை தலைமை தாங்கியவர்களாலும் நிராகரிக்கப்பட்ட திட்டங்களுக்கு வடிவம் கொடுக்க முனைந்தனர்.

எடுத்துக்காட்டாக, இந்தியா - சிறிலங்கா உடன்பாட்டின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாண சபைக்கு வடிவம் கொடுக்க ஈ.பி.ஆர்.எல்.எவ், குறிப்பாக வரதராஜப் பெருமாள் முனைப்பாகச் செயற்பட்டவர். இதன் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சர் பதவி அவருக்குக் கிடைக்கப் பெற்றது.

இதே போன்றே, பொதுத்தேர்தல் என்ற ரீதியில், 1994இல் அன்றைய சனாதிபதி யாழ்குடாநாட்டில் தேர்தலை அறிவித்து, அன்று இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த தீவுப்பகுதியில் மட்டும் தேர்தலை நடத்திய போது அதில் பங்கேற்று சிங்கள ஆட்சியாளர்களின் திட்டத்திற்கு ஈ.பி.டி.பியினர் ஒத்தாசை புரிந்தனர். இதன் மூலம் ஒன்பது பாராளுமன்றக் கதிரைகள் அவர்களுக்குப் பரிசாகக் கிடைத்தன.

இவ்விரு குழுவினரையும் பாதுகாக்க வேண்டும் என சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தரப்பில் இருந்தும் இந்திய தரப்பிலிருந்தும் விடுக்கப்படும் கோரிக்கைகள், அழுத்தங்கள் என்பனவே இவ்விரு குழுக்களும் அவ்விரு தரப்பிற்கும் எத்தகைய விசுவாசமாகச் செயற்பட்டார்கள் என்பதை வெளிப்படுத்தப் போதுமானதாகும்.

இந்த வகையில், தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திற்கு எதிராக நீண்ட காட்டிக்கொடுப்பையும் - அதன் மூலம் சுகபோகங்களையும் அனுபவித்தவர்கள் தற்பொழுதும் அதேபாதையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முனைவதொன்றும் ஆச்சரியமானதல்ல. ஆனால், இவர்களின் ஆலோசனைகளைக் கேட்பவர்கள், அமுல்படுத்த விளைபவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிரானவர்களாகவும், இன்றைய சூழ்நிலையில் சமாதான முயற்சிகளுக்கு எதிரானவர்களாகவுமே இருக்கமுடியும்.

# தொண்டமான்கள், ஹக்கீம்கள் எமக்கு வேண்டாம் இவ்வருட முடிவுக்குள் ஐ. தே. கட்சியைத் துரத்துவோம்

## அநுரா பண்டார நாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் முடிவடைவதற்குள் ஐ.தே.மு.அரசை விரட்டியடிப்போம்என்று பாராளுமன்ற உறுப்பினர்அநுராபண்டாரநாயக்க சிலாபத்தில் சூளுரைத்துள்ளார்.

சிலாபம்- ஆனந்த தேசிய பாடசாலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போது அவர் இவ்வாறு சூளுரைத்துள்ளார்.

தொடர்ந்தும் அநுரா பண்டாரநாயக்க அங்கு உரையாற்றும்போது தெரிவித்ததாவது, எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு யூ.என்.பி.க்கு வால் (பந்தம்) பிடிக்கும் கட்சிகளும் நமக்குள் உள்ளன. நான் அது பற்றிக் கூறமாட்டேன். ஆனாலும் ஐ.தே.கட்சிக்கு எதிராகவுள்ள அனைத்துக்கட்சிகளையும் ஒன்று சேர்த்துக்கொண்டு ஜே.வி.பி.யினருடன் கூட்டுச் சேர்ந்து இந்த ஆண்டு முடிவடைவதற்குள் இந்த அரசாங்கத்தைத் துரத்தியடிப்போம்.

கோள்மூட்டி, இடத்திற்கு இடம் வால் பிடித்துத் திரிபவர்களும், தொண்டமான்கள் ஹக்கீம்கள், எமக்கு வேண்டாம்.

நாம் எப்படிக் குறை கூறினாலும், யாருக்கு ஏசினாலும், மகாவலி திட்டத்தை செயற்படுத்திய ஜே.ஆர் .ஜயவர்த்தனவுக்கும், கம் உதாவ திட்டத்தை ஆரம்பித்து 'ஜனசவிய' வைக் கொடுத்த ஆர். பிரேமதாசாவுக்கும், ஒன்றுமே செய்யாமல் அமைதியாக இருந்த டி.பி.விஜேதுங்கவுக்கும் ஒரு இலட்சியம் இருந்தது.

ஆனால் ஒரு இலட்சியமும் இல்லாத தலைவராக ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார்.

சனாதிபதி இவ்வளவு காலமும் பொறுத்திருந்தது போதும் இனிமேலும் பொறுமையுடன் இருக்கத்தேவையில்லை.

தற்போது அரசை விரட்டியடிக்க நேரமும் காலமும் வந்து விட்டது. இன்னும் ஆறுமாதங்கள் வரை காத்துக் கொண்டிருந்தாலும் நாடு நாசமாகிவிடும்.

நாட்டை உண்ணும் மக்களை விலக்குவதற்கு அவருக்கு முதுகெலும்பு இல்லை. நாடு பிரிக்கப்படும் பொழுது ரணில் எங்கோ பார்த்துக்கொண்டிருக்கின்றார்.

சோற்றுப்பானையும் அகப்பையும் சனாதிபதியின் கையிலேயே யுள்ளது. அவர் அதனை உரிய நேரத்திற்கு பங்கிட்டுகொடுப்பார். இந்த நாடு தற்போது நிலை குலைந்துகாணப்படுகின்றது. ஜே.வி.பியினரும் நாமும் கூட்டு இணைவதன் நோக்கம் ஐதேகட்சியை விரட்டியடிப்பதற்கேயாகும் என்று கூறியுள்ளார்.

# அறுதிப் பெரும்பான்மையைக் கொண்டு வட-கிழக்கு பிரச்சினையைத் தீர்க்க முடியாது

## -அமைச்சர் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

அறுதிப் பெரும்பான்மையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு வடகிழக்குப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாது அரசியல் ரீதியாக வடக்கு கிழக்கில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கான தீர்வு என்பது அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் நிலைமையை உருவாக்க வேண்டும் என்று அமைச்சர் ரவூப்ஹக்கீம் கூறியுள்ளார்.

பொத்துவில் கிழக்கு மாகாணத்தில் சகல வளங்களும் நிறைந்த பிரதேசமாகும் நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு இங்குள்ள வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டால் பொத்துவில் சொர்க்கபுரியாக மாறும்.

இங்கு வாழ்கின்ற 03 இனங்களுக்கிடையிலும் ஒற்றுமையும், புரிந்துணர்வும் அதேபோன்று அந்தப் பிரதேசங்களிலிருக்கின்ற வளங்களின் பங்கீடு முதலிய விடயங்களிலேயே நியாயமும், நீதியும் கிடைப்பதற்கான ஒரு கட்டமைப்பை நாம் எங்களுக்கிடையில் உருவாக்கவேண்டும் அறுதிப் பெரும்பான்மையை மட்டும் அடிப்படையாகக்கொண்டு இந்தப் பிரச்சினைகளை வடக்கு கிழக்கில் தீர்க்கமுடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

# கனிஷ்டபிரிவு கால்பந்து போட்டிகள் இன்று கோலாகல ஆரம்பம்

தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவில் சுவிஸ் அணிகள் கலந்து கொள்ளும் தேசிய ரீதியிலான கனிஷ்ட பிரிவு மேஜர் முரளி ஞாபகார்த்த கால்பந்து போட்டிகள் இன்று கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பிக்கப்படுகின்றது.

13,15,17,19 வயதுப் பிரிவு அணிகள் பங்குபற்றும் இப்போட்டியில் தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களான கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார் ஆகியவற்றில் இருந்து மேற்படி பிரிவுகளைச் சேர்ந்த அணிகளுடன் சுவிஸ் அணிகளும் கலந்து கொள்கின்றன.

இதற்காக கிளிநொச்சி மைதானம் அலங்கரிக்கப்பட்டு போட்டிக்கான தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சிக்களமாக அமையவுள்ள இப்போட்டிகள் மிகுந்த எதிர்பார்ப்பை விளையாட்டு ஆர்வலர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி போட்டிகளில் பாடசாலை மாணவர்களே பெரும்பாலும் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.




# இனிவரும் போட்டிகளில் பொலக் சிறப்பாகப் பந்துவீசுவார்

## கிரஹம்ஸ்மித் நம்பிக்கை

நட்வெஸ்ட் முத்தரப்பு தொடரின் மீதமுள்ள போட்டிகளில் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் ஷேன் பொலக் சிறப்பாக விளையாடுவார் எனத் தற்போதைய அணித்தலைவர் கிரஹம் ஸ்மித் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் நட்வெஸ்ட் முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்காவும் இங்கிலாந்தும் மோதவுள்ளன.

இந்தப் போட்டியானது வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. இதற்கு முன்பு தென்னாபிரிக்கா இரண்டு போட்டிகளில் விளையாடவுள்ளது. இன்று நடைபெறவுள்ள போட்டியில் சிம்பாவ்வே அணியுடன் தென்னாபிரிக்கா விளையாடவுள்ளது.

இந்த முத்தரப்புத் தொடரில் இது வரை 2 விக்கெட்டுக்கள் மட்டுமே பொலக் வீழ்த்தியுள்ளார். இதில் பல தடவைகளில் அவரது பந்து வீச்சு சிறப்பானதாக அமைய வில்லை.

பொலக் சிறப்பாக விளையாடாதது குறித்து இவருக்குப் பதிலாக தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள உறுஸ்மித்கூறுகையில், பொலக் உண்மையிலேயே சிறப்பாகப் பந்து வீசுகிறார் இந்த முத்தரப்பு தொடரில் ஒரு சில விக்கெட்டுக்களை மட்டுமே பொலக் வீழ்த்தியிருந்தாலும் இனிவரும் போட்டிகளில் அவர் மிகச்சிறப்பாகப் பந்து வீசுவார் என நம்புகிறேன் என்றார்.

# பாக்.கிரிக்கெட் சபையிடம் லதீப் மன்னிப்புக் கோரினார்

(இஸ்லாமாபாத்)

சர்வதேச கிரிக்கெட் சபைக்கு கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாகக் கடிதம் எழுதிய பாகிஸ்தான் அணித்தலைவர் ரஷிட் லதீப் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் மன்னிப்புக் கோரினார்.

இது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைச்செய்தித் தொடர்பாளர் சம்புல் ஹசன் கூறுகையில், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை கலந்தாலோசிக்காமல் சர்வதேச கிரிக்கெட் சபைக்கு கடிதம் எழுதிய தன் மூலம் தவறு செய்து விட்டதாக லதீப் கடிதம் ஒன்றினை பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் அனுப்பியுள்ளார்.

இதற்காக தான் மிகவும் வருந்துவதாகவும் எதிர்காலத்தில் கிரிக்கெட் சபையின் அனுமதியின்றி இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதில்லை என்றும் லதீப் தெரிவித்திருந்தார்.

லதீப் என்னதான் மன்னிப்புக் கோரினாலும் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதில் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முனைப்பாகவே உள்ளது.

லதீப்பின் இக்கடிதத்தால் கிரிக்கெட்சபை இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்ட பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கிரிக்கெட் சூதாட்டத்தை தடுக்க வேண்டும் என்ற லதீப்பின் ஆர்வம் எங்களுக்குப் புரிகிறது. என்றாலும் அவர் எழுதிய கடிதத்தில் விதி முறைகள் ஏதும் மீறப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்துள்ளது.

# கிளி. மருத்துவமனை மீண்டும் திறக்கப்படுவது நகரைப்புதுப் பொலிவு பெறச்செய்கின்றது

## - திறப்பு விழாவில் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரில் முன்னர் இயங்கிவந்த இந்த மருத்துவ மனையை இன்று மீண்டும் திறப்பது கிளிநகரை புதுப்பொலிவு பெறச் செய்கின்ற ஒரு நிகழ்வாக அமைவதோடு ஒரு மகிழ்வான நிகழ்வு மாகும் என நேற்று கிளிநொச்சி மருத்துவமனைத் திறப்புவிழா நிகழ்வில் கலந்துகொண்டுசிறப்புரை நிகழ்த்திய தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இதே இடத்தில் இயங்கிவந்த மருத்துவமனை அரசபடைகளால் தாக்கி அழிக்கப்பட்ட நிலையில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இந்த மருத்துவமனை உபகரணங்களையும் நோயாளர்களையும் வேறு இடங்களுக்கு நகர்த்திச் சென்று- இடம் பெயர்ந்து அக்கராயன் பகுதிக்குச் சென்று குறைந்த வளங்களுடன் மிக நீண்ட காலம் மருத்துவப் பணியை மேற்கொண்டுவந்தது.

அந்தவகையில் முதலில் கிளிநொச்சி நகர் மீண்டும் மக்கள் குடியமரக்கூடிய அளவுக்கு போர்ச் சூழலில் இருந்து அவற்றை மீட்டுத் தந்த போராளிகளுக்கும் மாவீரர் களுக்கும் நன்றி கூறக்கடமைப்பட் டுள்ளோம். அவர்களின் விலைமதிப் பற்ற உழைப்பினால் தான் நாம் இந்த மண்ணிலே மீண்டும் வந்துள் ளோம்.

ஆனாலும், மூன்று வருடங்களுக்கு முன்னர் மீட்கப்பட்ட இந்த மண்ணிலே பல்வேறு துறையினரும் சிறுகச் சிறுக வந்து தமது பணிகளை ஆற்றினாலும் கூட ஒரு நகரின் வளர்ச்சிக்கு வைத்தியசாலைகள், பாடசாலைகள், மின்வசதிகள் என்பன நிறைவுபெறுகின்ற போது தான் அந்நகர் பொலிவுபெறும். அந்தவகையில் இம்மருத்துவமனை இன்று இங்கு மீளவும் அமைக்கப்பட்ட நாள்தான் இந்நகர் பொலிவு பெற்ற நாளாக அமைந்துள்ளது.

இங்கு மக்கள் மீண்டும் குடியேறுவதற்கு ஏற்றவகையில் இந்த மண்ணை எமக்கு மீட்டுத்தந்த போராளிகளை நாம் வாழ்த்தி வணங்குவதைப் போல-இங்கு இம் மருத்துவமனையை மீண்டும் அமைக்க பல்வேறு வகையிலும் பலரது உதவிகள் பங்களிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்களை நாம் பாராட்டுகின்றோம்.

இந்த மண்ணைமீட்பதற்கு எத்தகைய போராட்டங்கள் நடைபெற்றதோ அதேபோல இந்த மருத்துமனையை மீண்டும் அமைப்பதற்கு பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தியே இம் மருத்துவமனையை மீண்டும் கொண்டு வந்துள்ளனர். எனத்தெரிவித்தார். (லோ)

### 15ஆம் திகதி விண்ணப்பிக்கலாம்

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 15ஆம் திகதி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# உதைபந்தாட்ட நுட்பங்கள்,விதிகள் நூல் கிளிநொச்சியில் வெளியீடு

முன்னைநாள் ஆசிரிய கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளரும் யாழ் பல்கலைக்கழக உடற்



கல்வி போதனாசிரியருமான ம.பத்மநாதன் அவர்களால் தமிழில் எழுதப்பட்ட உதைபந்தாட்ட நுட்பங்கள், விதிகள் நூல் நேற்று மாலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட பந்தலில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு விழாவில் சுவிஸ் நாட்டில் இருந்து வருகை தந்த உதைபந்தாட்ட வீரர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் முதல் பிரதியை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தங்கனிடம் இருந்து முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர்குருகுலராஜா அவர்கள் பெற்றுக்கொண்டார். வெளியீட்டுரையை கிளிநொச்சி பிரதி வலயக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் நிகழ்த்தினார்.

## முரசொலிமாறன் காலமானார்

இந்திய மத்திய அமைச்சரும் தி.மு.க பாராளுமன்ற உறுப்பினருமான முரசொலிமாறன் நேற்று மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட இவருக்கு ஏற்கனவே இருதயத்தில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட் டுள்ளது. மீண்டும் அதே நோயினால் பாதிக்கப்பட்ட அவர் நினைவு திரும்பாத நிலையில் மரணமடைந்துள்ளார்.

## இந்திய மீன்பிடி...

ட்டு மீனவர்களின் சொத்துக்கள் நாசமாகியுள்ளன. இது தொடர்பாக இந்திய அரசுடன் தொடர்புகொண்டு ஒரு நல்ல முடிவை எடுக்குமாறு மீன்பிடி அமைச்சுக்குப் பல மகஜர்கள் அனுப்பியும் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதே வேளை, ஏராளமான சொத்தழிவுகளைச் செய்யுமளவுக்கு இந்திய ரோலர்களின் நடமாட்டம் தற்பொழுது மிகவும் அதிகரித்துள்ளது.

கடந்த வாரமும் பருத்தித்துறைக் கடற்பரப்பில் ஏராளமான சொத்தழிவுகளை இந்திய ரோலர்கள் புரிந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (33)

## ஆலய வருடாந்த...

கும் ஒலிபெருக்கி பொருத்தி பாடல்கள் இசைப்பதற்கும் தகுந்த நடவடிக்கை எடுத்து அனுமதி பெற்றுத் தருமாறு ஆலய பரிபாலன சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்வாலயப் பகுதி அமைந்துள்ளது 512 வது பிரிகேட்ஸ் படைத்தளம் என்பது குறிப்பிடத்தக்கது. (33)

## முதலாவது...

கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் இப்பணியில் பெண்கள் பிரிவு இணைக்கப்பட்டு அவர்களுக்கான சர்வதேச தரத்திலான பயிற்சி நிறைவுபெற்று இன்று வெளியேற உள்ளனர். இவ்வாறு வெளியேறும் 34 வீராங்கனைகளும் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பல்வேறு மனிதாபிமான பணிகளில் ஈடுபடுத்தப்பட வுள்ளனர்.(லோ)

## உயர் பாதுகாப்பு...

ளை மேற்கொள்ளும் போதும் தனி மனிதப் பாதுகாப்பைக் பாதிக்காத வகையிலும் சிந்தித்தே உருவாக்க வேண்டும். இதனை பாதுகாப்பு வலயங்களை உருவாக்கும் இராணுவத்தினர் கருத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்படும் போது தனிமனித உரிமைகள் மதிக்கப்படாமையால் தான் முரண்பாடுகள் தோற்றம் பெறுகிறது. இதுவே இன்று பெரும் சிக்கல்களாகத் தோற்றம் பெற்றுள்ளது.

எனவே எந்த ஒரு செயற்பாட்டையும் அரசியல் ரீதியாகவோ இராணுவ ரீதியாகவோ செயற்படுத்தாது மனிதவுரிமைகளை மதித்துச் செயற்படுத்தல் வேண்டும். இதன் மூலமே இன்று தோன்றியுள்ள பாதுகாப்பு வலயம் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும். இது விடயத்தில் அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளினதும், பொதுமக்கள் பிரதிநிதிகளினதும் ஒருமித்த கருத்துக்களைக் கேட்க வேண்டும். இவ்வாறு அரசாங்கம் செயற்படுமாயின் பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காண வழியுண்டு. அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பிரச்சினைக்கு நல்ல அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்ற நோக்குடன் சிந்திக்கும் போதுதான் அனைவரும் எதிர்பார்க்கும் ஒரு நல்ல தீர்வை எட்ட முடியும். இங்குகாணப்படும் இனப்பிரச்சினைக்கு ஒரு மித்த ரீதியில் தீர்வுகாணப்பட வேண்டும். இருதரப்பினரும் அனைத்துத் தரப்பினரதும் உரிமைகளை மதித்து ஒரு நிரந்தரத்தீர்வு காணப்படுவதற்குப் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தமாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த இமயவன் மற்றும் சுதா ஆகியோரும், படையினர் தரப்பில் 51வது படையணியைச் சேர்ந்த கேணல் ஜெயசுந்தர பலாலி படைத்தலைமை சார்பில் மேயர் செனிவிரத்தின ஆகியோரும் கலந்துகொண்டனர். யாழ் . ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ்சவுந்தரநாயகம் மனிதநேய அமைப்புத் தலைவர் சு.பரமநாதன் வணபிதா எ.ஜெய.பேணாட் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ் இணைப்பாளர் யுவன்சங்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

போர்கொங் அமைப்பின் சார்பில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யு.என்.எச்.சி.ஆர் சார்பில் இவ்வமைப்பின் யாழ் வதிவிடப் பிரதிநிதியான ரெய்சுக்கி மொறட்டொய மற்றும் பேட்கட்ரோமஸ் ஆகியோரும் சர்வதேச கண்காணிப்புக்குழுவைச் சேர்ந்த டக்கின் அதான ஆகியோரும் சர்வதேச மாணவர் அபிவிருத்திப்பேரவை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை றொக்கிவில்லியத்துடன் நைஜீரிய நாட்டின் இராணுவத் துறைசார்ந்த வல்லுனரான கைவூட்தோமி கலந்துகொண்டு உரையாற்றினார்.

இதன்போது அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவத்தினரின் அத்துமீறல்கள் போன்ற கெடுபிடி நடவடிக்கைகளால் மக்கள் படும் இன்னல்கள் தொடர்பாகவும் அதனைத் தீர்க்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. (33,27)

## கிளிநொச்சி...

பட்ட இந்த இராணுவ நடவடிக்கை காரணமாக 50 ஆண்டுகளுக்கு மேலாக மக்களுக்குப் பணியாற்றி வந்த கிளி மாவட்ட மருத்துவமனை தனது சொந்த இடத்தைவிட்டு இடம்பெயர்ந்து அக்கராயன் பகுதியில் பெருமசிரமங்களின் மத்தியில் இயங்கி வந்தது.

பின்னர் கிளிநொச்சி நகரை விடுதலைப்புலிகள் மீட்ட பின்னர் மீண்டும் இம்மருத்துவமனையை சொந்த இடத்தில் அமைவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மீண்டும் தனது சொந்த இடத்தில் மக்களுக்கான பணியை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

மருத்துவமனைதிறப்புவிழா நிகழ்வில் மங்கல விளக்கினை வணபிதா றெஜினோல்ட், பிரதிக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன ஏற்றிவைத்தார். அடுத்து மாவட்ட மருத்துவமனையை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். காரியாலயத்தை தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண் அவசர சிகிச்சைப் பிரிவை வைத்தியகலாநிதி தர்மேந்திரா ஆகியோர் திறந்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதி, பற்சிகிச்சை நிலையம், ஊசிமருந்து, மருந்துகட்டும் பிரிவு என பல்வேறு பட்ட பகுதிகளும் திறந்து வைக்கப் பட்டுள்ளது.இந்நிகழ்வில் பல்துறை சார்ந்தவர்களும் கலந்துகொண்டனர். (லோ)


## சாவு அறிவித்தல்

### தனுஷ்கோடி- சுப்பிரமணியம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் பாண்டியன்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தனுஷ்கோடி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று சாவடைந்துள்ளார். அன்னார் சவுந்தரி காந்தியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான தனுஷ்கோடி , பார்வதியின் பாசமிகு மகனும், தம்பையா(விசுவமடு - இளைப்பாறிய அதிபர்), உலகநாதன்(செட்டிகுளம்), சண்முகலிங்கம் (செட் டிகுளம்),காமாச்சிதேவி(செட்டிகுளம்), தையல் நாயகி(செட்டிகுளம்) காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் (செட்டிகுளம்), கேதீஸ்வரி(செட்டிகுளம்), கனகம்மா (செட்டிகுளம்), ஆகியோரின் சகோதரனும்,பாஸ்கரன் (ஈழநாதம்), சுதாகரன், அருட்செல்வி, பிரபாகரன், லலிதா, யாழினி, சிறிகரன், ராகினி ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

இல149ஏ,
நெட்டாங்கண்டல்,
பாண்டியன்குளம். (இ)

தகவல்:-
சு.பாஸ்கரன்,
(மகன்)



## வீரவணக்கம்

### லெப். கேணல் நிர்மலன்

தாயின் மடியில்
26 — 05 — 1960



தாயக மண்ணில்
08 — 07 — 2003

சிவானந்தன் நிர்மலராஜ்
(பரந்தன் வீதி, முரசுமோட்டை)

புன்னகை பூத்தவன்
நிர்மலன்
சீமையில் இருந்தபோது மக்களுக்காய்
மரணிப்பேன் என்றாய்
துன்பத்தை தலைவணக்காய்

தாங்கினேன் என்று
சிறகு விரிக்கின்ற சிறப்புபடையணியின்
சிறகாய் இருந்தாய்
சிறகு ஒடிந்ததே.

நிரந்தர முகவரி:
பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(சி-8226)

சிறப்புப் படையணி.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூலை மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.